**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண். இ.ம.எண்.
எச்.எம்.ஓ.பி.எண்.8/2022 நி.வே.ம.எண்.

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **ம.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | R.B.ராஜரத்தினம் | வட்டம் | : | சேலம் |
| த/பெ | : | பாஸ்கரன் | மாவட்டம் | : | சேலம் |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | தாதகாபட்டி | வயது | : | 37 |

**ம.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

27.04.2018-ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் (அசல்) **ம.சா.ஆ.1** ஆகவும், 06.05.2021-ம் தேதியிட்ட எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் நோட்டீஸ் (அலுவலக நகல்) **ம.சா.ஆ.2** ஆகவும், 08.05.2021-ம் தேதியிட்ட ரிஜிஸ்தர் போஸ்ட்டில் எதிர் மனுதாரர் கையெழுத்து செய்த கார்டு (அசல்) **ம.சா.ஆ.3** ஆகவும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவரும் சேர்ந்து எடுத்த திருமண போட்டோ (அசல்) **ம.சா.ஆ.4** ஆகவும், மனுதாரரின் ஆதார் கார்டு (நகல்) அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **ம.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.